Click Here to View more details : https://bit.ly/2W5BIB5

# வரலாறு

# தமிழகம்

## சங்ககாலத் தமிழகம்

1. **தமிழகத்தில் புதிய கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கீழ்க்கண்ட எந்த இடத்தில் கிடைத்துள்ளது?**
   அ) காஞ்சிபுரம் ஆ) பல்லாவரம்
   இ) மகாபலிபுரம் ஈ) புதுச்சேரி
2. **பண்டைத் தமிழர்கள் பின்வரும் எந்த நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருக்கவில்லை?**
   அ) கிரேக்கம் ஆ) ரோம்
   இ) எகிப்து ஈ) ஜப்பான்
3. **முதல் தமிழ்ச்சங்கம் பின்வரும் எந்த நகரில் செயல்பட்டு வந்தது?**
   அ) தென்மதுரை
   ஆ) வடமதுரை
   இ) பஃறுளியாற்றங்கரை
   ஈ) குமரி
4. **தமிழின் முதல் இலக்கண நூல் யாது?**
   அ) தொல்காப்பியம்
   ஆ) நன்னூல்
   இ) அகத்தியம்
   ஈ) தெளிவான சான்று இல்லை
5. **சேரர்களின் தலைசிறந்த துறைமுக நகரங்கள் யாவை?**
   அ) பூம்புகார்
   ஆ) தொண்டி
   இ) முசிறி
   ஈ) (ஆ) மற்றும் (இ)
6. **சங்ககால சோழர்களில் தலைசிறந்த சோழ மன்னன் யார்?**
   அ) கரிகாலன்
   ஆ) இராஜராஜ சோழன்
   இ) இராஜேந்திர சோழன்
   ஈ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
7. **சங்ககால சோழர்களின் தலைநகரம் எது?**
   அ) தஞ்சாவூர்
   ஆ) கங்கைகொண்ட சோழபுரம்
   இ) உறையூர்
   ஈ) பூம்புகார்
8. **கோவலன் வழக்கில் தவறாகத் தீர்ப்பு கூறி, பின் தன் தவறையுணர்ந்து உயிர் துறந்த பாண்டிய மன்னன் யார்?**
   அ) நெடுஞ்செழியன்
   ஆ) மாறவர்மன் அவனிசூளாமணி
   இ) சுந்தரபாண்டியன்
   ஈ) கடுங்கோன்
9. **கடையெழு வள்ளல்களில், தான் பூண்டிருந்த ஆரத்தினையும் கடகத்தினையும் புலவர் வன்பரணருக்கு கொடுத்துவிட்டு தன் பெயர் கூறாமல் சென்றவர் யார்?**
   அ) பாரி ஆ) நள்ளி
   இ) ஓரி ஈ) காரி
10. **குறுநில மன்னர்களான கடையெழு வள்ளல்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?**
    அ) கைக்கோளர் ஆ) வேளிர்கள்
    இ) வாணர்கள் ஈ) அரையர்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. ஆ | 2. ஈ | 3. அ | 4. இ | 5. ஆ | 6. அ | 7. இ | 8. அ | 9. ஆ | 10. ஆ |



Click Here to View more details : https://bit.ly/2W5BIB5

Click Here to View more details : https://bit.ly/2W5BIB5



**11. களப்பிரர்கள் தமிழகத்தை ஆட்சி செய்த காலத்தில் வஜ்ஜிரநந்தி எனும் சமணத்துறவியினால் ஏற்படுத்தப்பட்ட சங்கம் எது?**

அ) இரண்டாம் தமிழ்ச்சங்கம்
ஆ) முதலாம் சமண சங்கம்
இ) பிராகிருத சங்கம்
ஈ) திரமிள சங்கம்

**12. புத்த தர்மர், புத்தகோஷர், போதிதர்மர் போன்றோர் கீழ்க்கண்ட யாருடைய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தனர்?**

அ) பல்லவர்கள் ஆ) பாண்டியர்கள்
இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்

**13. சங்ககாலத்தில் வயலும் வயல் சார்ந்த இடங்களும் எவ்வாறு அழைக்கப்பட்டன?**

அ) மருதம் ஆ) முல்லை
இ) குறிஞ்சி ஈ) நெய்தல்

**14. சங்ககாலத்தில் பாலைநிலத்தில் வாழ்ந்த மக்களின் தெய்வம் எது?**

அ) அம்மன் ஆ) கொற்றவை
இ) துர்க்கை ஈ) வருணன்

**15. சங்ககாலத் தமிழ் மக்கள் கொண்டாடிய விழா எது?**

அ) சதய விழா
ஆ) தீபாவளி
இ) தைப்பொங்கல்
ஈ) இந்திரவிழா

## பல்லவர்கள்

**1. சாதவாகனர்களை வீழ்த்திப் பல்லவப் பேரரசிற்கு அடிக்கல் நாட்டிய மன்னன் யார்?**

அ) மகேந்திரவர்மன்
ஆ) சிவஸ்கந்தவர்மன்
இ) மாறவர்மன்
ஈ) சிம்ம விஷ்ணு

**2. அவனிசிம்மன் என்ற பட்டப் பெயரையுடைய பல்லவ மன்னன் யார்?**

அ) மாறவர்மன்
ஆ) சிவஸ்கந்தவர்மன்
இ) மகேந்திரவர்மன்
ஈ) சிம்மவிஷ்ணு

**3. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் பின்வரும் எந்த மன்னனிடம் தோல்வியடைந்தான்?**

அ) இரண்டாம் புலிகேசி
ஆ) இரண்டாம் கோவிந்தர்
இ) ஹர்ஷர்
ஈ) முதலாம் புலிகேசி

**4. பின்வரும் எந்த பல்லவ அரசனின் ஆட்சிக்காலத்தில் சீனப்பயணியான யுவான்சுவாங் தமிழகம் வந்தார்?**

அ) முதலாம் மகேந்திரவர்மன்
ஆ) இரண்டாம் மகேந்திரவர்மன்
இ) முதலாம் நரசிம்மவர்மன்
ஈ) இரண்டாம் நரசிம்மவர்மன்

**5. மாமல்லபுரத்தின் 'கடற்கரைக் கோயில்', 'காஞ்சி கைலாசநாதர் கோயில்' போன்றவற்றை கட்டிய மன்னன் யார்?**

அ) மகேந்திரவர்மன்
ஆ) இரண்டாம் நரசிம்மவர்மன்
இ) முதலாம் நரசிம்மவர்மன்
ஈ) நந்திவர்மன்

**6. திருமங்கையாழ்வாரின் சமகாலத்தைச் சார்ந்த பல்லவ மன்னன் யார்?**

அ) முதலாம் நரசிம்மவர்மன்
ஆ) முதலாம் மகேந்திரவர்மன்
இ) இரண்டாம் நந்திவர்மன்
ஈ) தந்திவர்மன்

**11. ஈ 12. ஈ 13. அ 14. ஆ 15. ஈ ✿ 1. ஆ 2. ஈ 3. அ 4. இ 5. ஆ 6. இ**



Click Here to View more details : https://bit.ly/2W5BIB5

Click Here to View more details : https://bit.ly/2W5BIB5



7. பின்வரும் எந்த பல்லவ மன்னனின் ஆட்சிக்காலத்தோடு நேரடி பல்லவர் மரபு முடிவுக்கு வந்தது?
அ) சிம்ம விஷ்ணு
ஆ) முதலாம் நந்திவர்மன்
இ) இரண்டாம் பரமேஸ்வரவர்மன்
ஈ) அபராஜிதன்

8. வரகுண பாண்டியனிடம் தோல்வியடைந்த பல்லவ மன்னன் யார்?
அ) நந்திவர்மன்
ஆ) முதலாம் நந்திவர்மன்
இ) இரண்டாம் மகேந்திரவர்மன்
ஈ) இரண்டாம் நந்திவர்மன்

9. 'நந்திகலம்பகம்' எனும் நூல் பின்வரும் எந்த பல்லவமன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது?
அ) முதலாம் நந்திவர்மன்
ஆ) இரண்டாம் நந்திவர்மன்
இ) மூன்றாம் நந்திவர்மன்
ஈ) நான்காம் நந்திவர்மன்

10. பின்வரும் எந்த மன்னனோடு பல்லவப் பேரரசு முடிவுக்கு வந்தது?
அ) அபராஜிதன்
ஆ) இரண்டாம் பரமேஸ்வர வர்மன்
இ) இரண்டாம் நரசிம்மவர்மன்
ஈ) மூன்றாம் மகேந்திரவர்மன்

11. பல்லவப் பேரரசின், மிகப் பெரிய ஆட்சிப்பிரிவு எது?
அ) விஷயம் ஆ) மண்டலம்
இ) மாகாணம் ஈ) ஊர்

12. பல்லவர்களால் பிராமணர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் பின்வரும் எவ்வாறு அழைக்கப்பட்டன?
அ) மங்கலம்
ஆ) சதுர்வேதி மங்கலம்
இ) மணிமங்கலம்
ஈ) பிரம்மதேயங்கள்

13. பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் அயல்நாட்டு வணிகர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
அ) நானாதேசிகர்கள்
ஆ) கடலோடிகள்
இ) வணிகர்கள்
ஈ) திரைகடலோடிகள்

14. பல்லவர்களின் கட்டடக்கலையில் மிக முக்கிய இடம் பிடித்திருந்தது எது?
அ) சுண்ணாம்பு சுதை
ஆ) செங்கல்
இ) மரம்
ஈ) பாறைகள்

15. 'மத்தவிலாசபிரகாசனம்' எனும் நகைச்சுவை நாடகத்தை வடமொழியில் இயற்றிய பல்லவ மன்னன் யார்?
அ) முதலாம் நரசிம்மவர்மன்
ஆ) நந்திவர்மன்
இ) முதலாம் மகேந்திரவர்மன்
ஈ) இரண்டாம் மகேந்திரவர்மன்

## பாண்டியர்கள்

1. களப்பிரர்களை வென்று மீண்டும் பாண்டியப் பேரரசை நிறுவிய மன்னன் யார்?
அ) அரிமர்த்தன பாண்டியன்
ஆ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
இ) கடுங்கோன்
ஈ) வரகுண பாண்டியன்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7. இ | 8. அ | 9. இ | 10. அ | 11. ஆ | 12. ஈ | 13. அ | 14. ஈ | 15. இ |
| ஒ | 1. இ | | | | | | | |



Click Here to View more details : https://bit.ly/2W5BIB5

Click Here to View more details : https://bit.ly/2W5BlB5



2. 'சடையவர்மன்' என்றழைக்கப்பட்ட பாண்டிய மன்னன் யார்?
அ) மாறவர்மன் அவனி சூளாமணி
ஆ) கடுங்கோன்
இ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
ஈ) சுந்தரபாண்டியன்

3. திருஞான சமபந்தரால் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றப்பட்ட பாண்டிய அரசன் யார்?
அ) மாறவர்மன் பரகேசரி
ஆ) மாறவர்மன் அரிகேசரி (கூன்பாண்டியன்)
இ) மாறவர்மன் அவனி சூளாமனி
ஈ) வீரபாண்டியன்

4. மங்களூரில் மராட்டியரை வென்ற பாண்டிய மன்னன் யார்?
அ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
ஆ) மாறவர்மன் அரிகேசரி
இ) இரணதீரன்
ஈ) கோச்சடையன் இரணதீரன்

5. பல்லவ மன்னன் நந்திவர்மனையும் சாளுக்கிய மன்னன் கீர்த்திவர்மனையும் வென்ற பாண்டிய மன்னன் யார்?
அ) சடையவர்மன்
ஆ) முதலாம் இராஜசிம்மன்
இ) சுந்தரபாண்டியன்
ஈ) மாறவர்மன் அவனி சூளாமணி

6. தற்போது இலண்டன் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ள வேள்விக்குடிச் செப்பேடுகள் பின்வரும் எந்த மன்னன் காலத்தில் எழுதப்பட்டன?
அ) நெடுஞ்சடையன் பராந்தகன்
ஆ) இரண்டாம் இராஜசிம்மன்
இ) வரகுண பாண்டியன்
ஈ) மாறவர்மன் அவளிசூளாமணி

7. முதலாம் (இடைக்கால) பாண்டியப் பேரரசு எந்த மன்னனின் ஆட்சிக் காலத்தோடு முடிவுற்றது?
அ) கடுங்கோன்
ஆ) வீரபாண்டியன்
இ) விக்கிரமபாண்டியன்
ஈ) ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்

8. மூன்றாம் குலோத்துங்க சோழனை வீழ்த்தி பிற்கால பாண்டிய மரபைத் தோற்றுவித்தவர் யார்?
அ) கடுங்கோன்
ஆ) விக்கிரம பாண்டியன்
இ) ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்
ஈ) அதிவீரராம பாண்டியன்

9. சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன் எனும் சிறப்புப்பட்டம் பெற்ற பாண்டிய மன்னன் யார்?
அ) அதிவீரராம பாண்டியன்
ஆ) குலசேகரபாண்டியன்
இ) இரண்டாம் குலேசேகரபாண்டியன்
ஈ) முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

10. பிற்காலப் பாண்டிய அரசை பேரரசாக மாற்றிய மன்னன் யார்?
அ) முதலாம் இராஜசிம்மன்
ஆ) முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்
இ) இரண்டாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்
ஈ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

11. வெனீஸின் 'மார்க்கோ போலோ' மற்றும் அரபு நாட்டின் 'வாசஃப்' ஆகியோர் தமிழகம் வந்தபோது தமிழகத்தை ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னன் யார்?

**2. அ 3. ஆ 4. ஈ 5. ஆ 6. அ 7. ஆ 8. ஆ 9. ஈ 10. ஆ**



Click Here to View more details : https://bit.ly/2W5BlB5

Click Here to View more details : https://bit.ly/2W5BlB5



அ) பராங்குசன்
ஆ) சுந்தரபாண்டியன்
இ) முதலாம் மாறவர்மன் குலசேகரன்
ஈ) இரண்டாம் மாறவர்மன் குலசேகரன்

12. 'நைடதம்' எனும் நூலை இயற்றிய பாண்டிய மன்னன் யார்?
அ) அதிவீரராம பாண்டியன்
ஆ) சுந்தரபாண்டியன்
இ) மாறவர்மன் அவனி சூளாமணி
ஈ) மாறவர்மன் அரிகேசரி

13. பாண்டிய நாட்டில் வேளாண்மைக்கு அடுத்து முக்கியத்துவம் வாய்ந்த தொழில் யாது?
அ) வேளாண்மை
ஆ) முத்துகுளித்தல்
இ) வணிகம்
ஈ) போர்

14. பாண்டியர்களின் ஆட்சியில் 'அரையர்கள்' என்றழைக்கப்பட்டவர்கள் யார்?
அ) ஊராட்சிமன்றத் தலைவர்கள்
ஆ) குறுநிலமன்னர்கள்
இ) சிற்றரசர்கள்
ஈ) அமைச்சர்கள்

15. பாண்டிய அரசு நிர்வாகத்தின் சிறிய நிர்வாகப் பிரிவு எது?
அ) ஊர் ஆ) குடி
இ) நகரம் ஈ) ஜனா

## சோழர்கள்

1. பிற்காலச் சோழ மரபை உருவாக்கிய விஜயலாயசோழன் கீழ்க்கண்ட எந்த மரபினரை வென்று தஞ்சையைக் கைப்பற்றினார்?
அ) முத்தரையர்
ஆ) பல்லவர்
இ) பாண்டியர்
ஈ) இராட்டிரகூடர்

2. 'மதுரையும் ஈழமும் கொண்ட சோழன்' என்றழைக்கப்பட்ட சோழ மன்னன் யார்?
அ) சுந்தரசோழன்
ஆ) ஆதித்த கரிகாலன்
இ) முதலாம் பராந்தகச்சோழன்
ஈ) விஜயலாயன்

3. காஞ்சிபுரத்தில் பொன்மாளிகையொன்றைக் கட்டிய சோழமன்னன் யார்?
அ) சுந்தரசோழன்
ஆ) ஆதித்த கரிகாலன்
இ) இராஜராஜசோழன்
ஈ) இரண்டாம் பராந்தகன்

4. சோழப் பேரரசின் புகழ்பெற்ற அரசனான இராஜராஜனின் உண்மையான பெயர் என்ன?
அ) அருண்மொழித் தேவன்
ஆ) ராஜன்
இ) அருண்மொழி வர்மன்
ஈ) அருணராஜன்

5. கடாரம் கொண்டான், வங்கம் கொண்டான் என்றெல்லாம் அழைக்கப்பட்ட சோழமன்னன் யார்?
அ) இராஜராஜ சோழன்
ஆ) சுந்தர சோழன்
இ) முதலாம் இராஜேந்திர சோழன்
ஈ) ஆதித்த கரிகாலன்

6. நேரடி சோழப்பேரரசின் கடைசி மன்னன் யார்?
அ) இரண்டாம் இராஜராஜ சோழன்
ஆ) அதி இராஜேந்திரன்
இ) இரண்டாம் இராஜேந்திர சோழன்
ஈ) முதலாம் இராஜேந்திர சோழன்

11. இ 12. அ 13. ஆ 14. ஈ 15. அ ❦ 1. அ 2. இ 3. ஈ 4. அ
5. இ 6. ஆ



Click Here to View more details : https://bit.ly/2W5BlB5